பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 70 நாள்: 23.06.2017

## மைலாப்பூர் இந்து மயான பூமியில் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால், கிருஷ்ணாம்பேட்டை மயான பூமியை பயன்படுத்தி கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, தேனாம்பேட்டை மண்டலம், கோட்டம்–125ல் உள்ள மைலாப்பூர் இந்து மயானபூமியில் மின் தகனமேடையில் பழுது ஏற்பட்டுள்ளதால், பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக 23.06.2017 முதல் 27.06.2017 வரை தற்காலிகமாக மூடப்பட உள்ளது.

மேலும், பராமரிப்பு பணி நடைபெறும் நாட்களில் அருகாமையில் உள்ள கிருஷ்ணாம்பேட்டை தகனமேடையை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி